Teachers' Provident Fund Accounts

* 323 Q—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state with reference to the answer given to Legislative Council Starred Question No. 95, on 8th December 1971—

(*a*) whether the Government have since ordered the payment of Government contribution on part-final withdrawal of amounts from Teachers' Provident Fund Accounts in aided schools for purposes other than house-construction; and

(*b*) if so, the details thereof?

ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் 8—12—1971-ல் 95-ஆம் எண் சட்ட மன்ற மேலவை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடையையொட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கிலிருந்து வீடுகள் கட்டுவது நீங்கலான பிற காரியங்களுக்காக திருப்பிக் கட்டாத முறையில், இறுதியாக வாங்கும் பகுதித் தொகைக்குரிய அரசுப் பங்குத் தொகையைக் கொடுக்கலாமென அரசு இப்போது ஆணையிட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பள்ளி ஆசிரியர்கள் தங்கள் வைப்பு நிதியிலிருந்து வீடுகட்டுதலுக்காக மட்டுமின்றி ஏனைய அங்கீகரிக்கப்பட்ட காரணங்களுக்காக பகுதி இறுதித் தொகையைப் பெறும்போது அத்தொகையையும் சேர்த்து அரசினரின் பங்குத் தொகை நிர்ணயிக்கப்படுமென்று அரசு ஆணை ஏற்கனவேயே பிறப்பிக்கப்பட்டு விட்டது. அவ்வாணையின் அடிப்படையில் தற்போது ஆசிரியர்கள் வைப்புநிதி விதிகளுக்கு, சில திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

THIRU M. RAJAH IYER: May I take it, Sir, for purposes other than house construction also, if permission has been accorded, Government contribution would not be denied to the teachers?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, வீடு கட்டுவதற்காகக் கொடுக்கப்படுகின்றதை நீக்கி, மற்ற அங்கீகரிக்கப்பட்டவைகள்

அத்தனைக்கும் அரசினர் பங்குத் தொகை கொடுப்பதற்காக அரசு ஆணை ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டு விட்டது. அதற்கான திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, வருங்கால வைப்பு நிதியிலிருந்து கடன் பெறுவதற்காக, பழைய காலத்திலிருந்தே விதிகள் இருக்கின்றன. அதற்காக அதில் சில காரணங்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த விதிகளின் காரணமாக அவர்கள் தங்களுக்கு வேண்டிய பணம் பெற முடியவில்லை. ஆசிரியர்கள் சேமிக்கக்கூடிய பணத்தைக் கடனாகத் தருவதற்கு, அவர்கள் எந்தக் காரணத்தைச் சொன்னாலும், கடன் கிடைக்கும் முறையிலே அந்த விதிகள் திருத்தப்படுமாவென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இன்னின்ன வகைகளுக்காக, இந்த அளவுக்கு அவர்கள் பெறலாமென்று ஒரு விதிமுறை இருக்கிறது. 50 சதவிகிதம் என்று கருதுகிறேன். அந்த விதி முறைகளுக்கு உள்ளடங்கிய முறையில் கடன் பெற முடியும். கடன் பெற வேண்டுமென்று, வேறு பல செலவுகளென்று கேட்பார்களேயானால், விதி முறைகளுக்கு உட்படாத நிலையில் கடன் வழங்க இயலாது. ஆகவே எந்தெந்த வகைகள் சேர்க்கப்பட வேண்டுமென்று சொன்னால், அது தனியாகப் பரிசீலிக்கப் பட வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, ஆசிரியர்கள் வெளியே கடன் வாங்குகிறபோது, வட்டி அதிகமாக இருக்கிற காரணத்தாலே, அவர்களுடைய சேமிப்பிலிருந்து இன்னும் அதிகமான பணத்தை வாங்க வகை செய்யுமாறு விதிகளின் திருத்தத்தை எதிர்காலத்திலே உருவாக்க வேண்டும். அப்படி அரசு உருவாக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது ஓரளவுக்கு வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு மேல் போகக் கூடாதென்ற கருத்தை அரசு கொண்டிருக்கிறது. அதனை மிகுதிப்படுத்த வேண்டுமென்றால், அதைத் தனியாகத்தான் பரிசீலிக்க வேண்டும்.

Teaching and Non-Teaching Staff of the Rajah Serfoji College, Thanjavur

*324 *Q*.—Thiru M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the services of the teaching staff of the Rajah Serfoji College, Thanjavur, prior to 1st July 1965 have been ordered to be counted for the purpose of fixation of their initial pay in the University Grants Commission scales of pay;